| | |
|---|---|
| ந. க. எண். ப & நி. II (7) / 20188 / 2016<br><br>நாள்: 08.02.2021 | இயக்குநர்,<br>உள்ளாட்சி நிதித் தணிக்கை,<br>ஒருங்கிணைந்த நிதித் துறை கட்டிடம்,<br>4வது தளம், அம்மா வளாகம்,<br>நந்தனம், சென்னை—35. |

## குறிப்பாணை

| | |
|---|---|
| பொருள்:- | பணி - உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை - மறைந்த திருமதி. சி. சுப்புலட்சுமி, உதவி ஆய்வரின் மகள் செல்வி. சு. சிவரஞ்சினி — கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது - தொடர்பாக. |
| பார்வை:- | அரசு ஆணை நிலை எண் 19, நிதி (உநி)த் துறை நாள் 12.01.2021 |

❖ ❖ ❖

திருநெல்வேலி, உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது பணிபுரிந்து வரும் செல்வி. சு. சிவரஞ்சினி இளநிலை உதவியாளரின் (கா/செ. திருமதி. சி. சுப்புலட்சுமி, உதவி ஆய்வரின் மகள்) பணி இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் இளநிலை உதவியாளராகப் பணிசேர்ந்த நாளான 04.07.2018 முற்பகல் முதல் பார்வையில் காணும் அரசு ஆணையின்வழி வரன்முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

2. செல்வி. சு. சிவரஞ்சினி, தற்காலிக இளநிலை உதவியாளரின் மருத்துவ உடற்தகுதிச் சான்றிதழ் ஏற்கனவே சரிபார்க்கப்பட்டது. மருத்துவ தகுதிச் சான்றிதழ்படி இவர் உடல் தகுதி பெற்றவராகக் கருதப்படுகிறார்.

3. இவர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து மூன்று (3) ஆண்டு பணிக்காலத்திற்குள் இரண்டு (2) ஆண்டு பணிக்கால அளவிலான தகுதிகாண் பருவம் 04.07.2018 முற்பகல் முதல் தொடங்கப்பட்டவராக அறிவிக்கப்படுகிறார். இவர் பவானிசாகர் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவரது தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கக் கருதப்படுவார்.

4. இளநிலை உதவியாளர் பதவியில் இவரது முதுநிலை அரசு ஆணை நிலை எண் 951 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள் 14.09.1984—ன் படி நிர்ணயம்

செய்து தனியே உத்தரவு பிறப்பிக்கப்படும். இக்குறிப்பாணை பெற்றமைக்கு உடன் ஒப்புகை அளிக்க வேண்டும்.

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

**இணைப்பு :** அரசு ஆணை

பெறுநர்

செல்வி. சு. சிவரஞ்சினி, இளநிலை உதவியாளர்,
திருநெல்வேலி, உள்ளாட்சி நிதித் தணிக்கை,
மண்டல இணை இயக்குநர் வழியாக

நகல்

1. மண்டல துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருநெல்வேலி (அரசு ஆணையுடன்).
2. பநி II (6) பிரிவு தகுதி காண் பருவத்தினர் பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யவும் மற்றும் முதுநிலை நிர்ணயம் கருதிடும் பொருட்டும் (அரசு ஆணையுடன்).
3. இருப்புக் கோப்பு
4. உபரி (3)